# பிளிப்கார்ட், ஐ.சி.ஐ.சி.ஐ லோம்பார்ட் மற்றும் டிஜிட் இன்சூரன்ஸ் ஆகியவை இணைந்து கோவிட் -19 மையப்படுத்தப்பட்ட சுகாதார காப்பீட்டை வழங்குகின்றன

- எளிதான உரிமைகோரல், மருத்துவமனையில் சேர்க்கப்படுதல், அறை அல்லது ஐ.சி.யூ வாடகை, ஆம்புலன்ஸ் உதவி மற்றும் தொலைதொடர்பு ஆலோசனை ஆகியவைகள் பலன்களில் உட்பட்டுள்ளன.
- டிஜிட்டல் உரிமைகோரல் செயல்முறை, பாலிசி வாங்கும் போது எந்தவொரு மருத்துவப் பரிசோதனைகள் தேவையில்லை

**பெங்களூரு - ஏப்ரல் 10, 2020** : இந்தியாவின் இரண்டு முன்னணி காப்பீட்டாளர்களான ஐசிஐசிஐ லோம்பார்ட் மற்றும் டிஜிட்டல் இன்சூரன்ஸ் ஆகியவற்றுடன் இணைந்து இந்தியாவின் உள்நாட்டு இ-காமர்ஸ் சந்தையான பிளிப்கார்ட், கோவிட்-19 – க்கான தெளிவாக பிரத்தியேக சுகாதாரக்காப்பீட்டுத் திட்டத்தை அதன் அடித்தளத்தில் அறிமுகப்படுத்துவதாக இன்று அறிவித்தது. உலகளாவிய தொற்றுநோயை எதிர்த்துப் போராடும் நுகர்வோருக்கு சுகாதாரப் பாதுகாப்பை செயல்படுத்துவதன் மூலம், இந்த இரண்டு குழு சுகாதார காப்பீட்டுத் திட்டங்கள், உடனடி உரிமைகோரல் நன்மைகளுடன் வருகின்றன மற்றும் இதை வாங்கும் நேரத்தில் எந்தவொரு மருத்துவப் பரிசோதனைகளும் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தொழில்துறை மதிப்பீடுகளின்படி, இந்திய மக்கள் தொகையில் 56% பேர் எந்தவொரு சுகாதார காப்பீட்டுத் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. இந்த நேரத்தின் தேவையைப் புரிந்துகொண்டு, ஐ.சி.ஐ.சி.ஐ லோம்பார்ட் மற்றும் டிஜிட்டல் இன்சூரன்ஸ் உடனான பிளிப்கார்ட்டின் கூட்டாண்மை அதன் பயனர்களுக்கு, மருத்துவமனையில் சேர்க்கப்படுவதிலிருந்து எளிதான உரிமைகோரல் வரை, பலதரப்பட்ட நன்மைகள் கொண்ட சுகாதார காப்பீட்டுத் திட்டங்களை வழங்குகிறது.

ஐ.சி.ஐ.சி.ஐ லோம்பார்ட்டின் **'கோவிட் -19 பாதுகாப்புக் காப்புறுதி'** கோவிட் -19 இன் பாஸிட்டிவ் நோயறிதலில் வாடிக்கையாளருக்கு உடனடியாக ரூ.25,000 செலுத்தும் நன்மையைக் கொண்டுள்ளது. இதன் வருடாந்திர ப்ரீமியம் தொகை ரூ.159 ஆகும். கூடுதலாக, இந்த திட்டம், சுகாதார உதவி பலன் , மெய்நிகர் மற்றும் தொலைபேசி ஆலோசனை நன்மை மற்றும் ஆம்புலன்ஸ் உதவியையும் வழங்குகிறது. மன அமைதியை உறுதிசெய்யும் வகையில், கார்டுகாப்பிகளுக்கு பதிலாக, உரிமைகோரல் ஆவணங்களின் டிஜிட்டல் நகல்களை காப்பீட்டாளரிடம் சமர்ப்பிக்க இது பிளிப்கார்ட்டின் வாடிக்கையாளர்களை அனுமதிக்கிறது.

*டிஜிட் இன்ஷூரன்ஸ்* வழங்கும் **'டிஜிட் நோய் குழு காப்பீடு'** நுகர்வோருக்கு மருத்துவமனையில் சேர்க்கப்படுகையில், ரூ.1 லட்சம் வரையிலான காப்புறுதியை, வருடாந்த பிரீமியமாக ரூ.511 உடன் பெறச்செய்கிறது. மேலும், இதில், அறை வாடகை அல்லது ஐ.சி.யு வரம்புகள் இல்லை. இந்த பாலிசி 30 நாள் முன் மற்றும் 60 நாட்களுக்கு பிந்தைய மருத்துவமனை அனுமதிக்கப்படுதல்களுக்கான கட்டணத்தை வசூலிக்கிறது. கூடுதலாக, பாலிசிதாரர்கள் ஆம்புலன்ஸ் சேவைகளுக்காக காப்பீட்டுத் தொகையில் 1% பெறலாம்.

**பிளிப்கார்ட்டின் ஃபிண்டெக் மற்றும் பேமெண்ட்ஸ் குழுமத்தின் தலைவர் ரஞ்சித் போயனபள்ளி** கூறுகையில், *"இந்திய நுகர்வோருக்கு ஒரு சோதனையான நேரத்தில், கோவிட் -19 க்கு எதிரான போராட்டத்தில் நாங்கள் ஒன்றிணைகிறோம். தடுப்பு நடவடிக்கைகள் மைய நிலைக்கு வருவதால், இந்த காலகட்டத்தில் சுகாதார தேவைகள் மற்றும் நன்மைகள் மேலும் அத்தியாவசிய தேவைகளாகின்றன. சுகாதார காப்பீட்டில் இந்தியா குறைவாக ஊடுருவி வருவதைக் காணும்போது, இந்த இடத்திலுள்ள*

*அமைப்புகள் ஒன்றிணைந்து அதிக அணுகலை வழங்கும் பொறுப்பினை ஏற்க வேண்டியது அவசியமாகிறது. பிளிப்கார்ட்டில், இந்த சோதனை நேரங்களில் நுகர்வோருக்கு அத்தியாவசிய தேவைகளை இயக்குவதே எங்கள் நோக்கம். இந்த முயற்சிக்கு சுகாதார காப்பீட்டு சேவைகள் மிக முக்கியமானவை. இந்தியாவின் இரண்டு முன்னணி காப்பீட்டு வழங்குநர்களுடன் கூட்டுசேர்வது மிகவும் தேவையான சுகாதாரத் திட்டங்களை கிடைப்பதை ஏதுவாக்குவதோடு மட்டுமல்லாமல், மலிவு விலையில் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் உறுதி செய்யும்"* என்று கூறினார்.

**ஐ.சி.ஐ.சி.ஐ லோம்பார்ட்டின் நிர்வாக இயக்குனர் சஞ்சீவ் மந்திரி** கூறுகையில், "ஐ.சி.ஐ.சி.ஐ லோம்பார்ட்டில், எங்கள் 'நிபாயே வாடே' தத்துவத்திற்கு ஏற்ப நுகர்வோருக்கு சரியான நேரத்தில் தீர்வுகளை வழங்குவது எங்கள் தொடர்முயற்சியாகும். தற்போதைய சூழ்நிலையில், கோவிட்-19 மீதான கூர்நோக்கம் கொண்ட காப்பீடு நுகர்வோருக்கு மிகவும் பொருத்தமானதாகும். பிளிப்கார்ட்டுடன் கூட்டாளராக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், ஆம்புலன்ஸ் சேவை மற்றும் டெலி-கன்சல்டேஷன் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட நன்மைகளுடன் எங்கள் மலிவு விலை கோவிட்-19 பாதுகாப்புக் காப்புறுதியை வழங்குகிறோம். இதனுடன் சேர்த்து, ஃபிளிப்கார்ட் வாடிக்கையாளர்களுக்கு 'வகையினத்தில் சிறந்த' உரிமைகோரல் தொடர்பான அனுபவத்தை வழங்க எங்களது முழுமையாக டிஜிட்டல்மயமாக்கப்பட்ட ஆதரவு அடித்தளம் முழுமையாக பொருத்தமாகத்திகழ்கிறது.

**டிஜிட் இன்சூரன்ஸின், தலைமை வினியோக அலுவலர் ஜஸ்லீன் கோஹ்லி** கூறுகையில், *"டிஜிட்டில் உள்ள எங்கள் நோக்கம் காப்பீட்டை எளிதாக்குவதும் வாடிக்கையாளர்களுக்கு உண்மையிலேயே தேவைப்படும் திட்டங்களை உருவாக்குவதுமே ஆகும். தற்போதைய உலகளாவிய நிலைமை, COVID-19 க்கு ஒரு காப்புறுதியை வழங்குவது காலத்தின் தேவையாகத் திகழ்கிறது. மேலும் பிளிப்கார்ட் இந்த லட்சியத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த திட்டம் ஐ.சி.யூ வாடகை மற்றும் அறை வாடகை உள்ளிட்ட மருத்துவமனையில் சேர்க்கும் செலவுகளை மட்டுமல்லாமல், பரிசோதனையில் பாசிட்டிவ் நிலை கண்டறியப்பட்ட COVID-19 நோயாளிக்கு முன்தை / பிந்தைய மருத்துவமனை மற்றும் ஆம்புலன்ஸ் கட்டணங்களையும் உள்ளடக்கியுள்ளதுது. இந்த கணிக்க முடியாத நேரங்களை ஒரு கருவியாக எளிமைப்படுத்தப்பட்ட காப்பீட்டின் மூலம் முடிந்தவரை சிறந்த முறையில் கையாள வேண்டும் என்பதே இதன் மைய கருத்தாக்கமாகும்"* என்று கூறினார்.

ஐசிஐசிஐ லோம்பார்ட் மற்றும் டிஜிட் காப்பீடு வழங்கும் பாலிசிகள் இப்போது பிளிப்கார்ட் இயங்குதளத்தில் கிடைக்கின்றன.

**ஃபிளிப்கார்ட் குழுமம் குறித்து:**

இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் வர்த்தகக் குழுமமாகத் திகழும் ஃபிளிப்கார்ட் குழுமம், ஃபிளிப்கார்ட், மிந்த்ரா, ஜபாங் மற்றும் ஃபோன்பே ஆகிய குழும நிறுவனங்களை உள்ளடக்கியதாகும். 2007 – ம் ஆண்டு, பல மில்லியன் நுகர்வோர்கள், விற்பனையாளர்கள், வணிகர்கள் மற்றும் சிறு வர்த்தகத்தினர் இந்தியாவின் மின்-வர்த்தகப் புரட்சியின் ஒரு பகுதியாகத் திகழ்வதை ஏதுவாக்கியுள்ளது. 200 மில்லியனுக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர் அடித்தளத்துடன், 150 மில்லியனுக்கும் மேற்பட்ட தயாரிப்புகளை 80 – க்கும் மேற்பட்ட வகையினங்களில் ஃபிளிப்கார்ட் வழங்கி வருகிறது. இந்தியாவில், மின்-வர்த்தகத்தை ஜனநாயகப்படுத்தும் எங்களது முயற்சிகள், அணுகுத்தன்மை மற்றும் கட்டுப்படியாகக் கூடிய தன்மையை மேம்படுத்துகிறது, வாடிக்கையாளர்களை மகிழ்விக்கிறது மற்றும் சூழலமைப்பில் பல லட்சம் பணிகளை உருவாக்குகிறது மற்றும் பல துலைமுறை தொழில்முனைவோர்களுக்கு திறனளிக்கிறது மற்றும் MSME-க்கள், புத்தாக்கத்தை முன்னின்று நடத்தி, பல தொழில்துறை முதல் அம்சங்களை சாத்தியமாக்குவதை ஏதுவாக்கிவருகிறது. கேஷ் ஆன் டெலிவரி, நோ காஸ்ட் EMI மற்றும் ஈசி ரிட்டர்ன்ஸ் போன்ற பல்வேறு வாடிக்கையாளரை-மையமாகக் கொண்ட புத்தாக்கங்களின் வழியாக ஆன்லைன் ஷாப்பிங்கை அதிகம் அணுகத்தக்கதாகவும் மற்றம் கட்டுப்படியாகக்கூடியதாகவும் பல மில்லியன் இந்தியர்களுக்கு இந்நிறுவனம் மாற்றுகிறது. ஆன்லைன் ஃபேஷன் சந்தையில் மிந்தரா மற்றும் ஜபாங், இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல்

பேமெண்ட்கள் அடித்தளம் ∴போன்பே ஆகியவற்றின் வழியாக, இந்திய வர்த்தகத்தின் மாற்றத்தினை தொழில்நுட்பத்தின் வழியாக வழிநடத்திவருகிறது.

**மேலதிக விபரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :** media@flipkart.com

## ICICI Lombard ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் பற்றி

ICICI Lombard 2019 ஆம் நிதியாண்டில் மொத்த நேரடி பிரீமியம் வருமானத்தின் அடிப்படையில் இந்தியாவின் மிகப்பெரிய ஆயுள்-சாரா தனியார் காப்பீட்டாளராக உள்ளது. மோட்டார், சுகாதாரம், தீ, தனிப்பட்ட விபத்து, கடல், உள்ளிட்ட விரிவான மற்றும் நன்கு பன்முகப்படுத்தப்பட்ட தயாரிப்புகளை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறோம். பொறியியல் மற்றும் பொறுப்பு காப்பீடு, பல விநியோக சேனல்கள் மூலம். மேலும் விவரங்கள் www.icicilombard.com - இல் கிடைக்கின்றன.

**மேலதிக தகவல்களுக்கு, தொடர்பு கொள்ளவும் : seema.jadhav@icicilombard.com**

## டிஜிட் குறித்து

காமேஷ் கோயல் அவர்களால் துவக்கப்பட்டு, உலகின் மிகப்பெரிய நிதியியல் சேவைகள் குழுமங்களில் ஒன்றாகத் திகழும் ∴பேர்∴பேக்ஸ் குழுமத்தின் பின்புலத்தைக் கொண்டுள்ள ஒரு புதிய-தலைமுறை பொது காப்பீட்டு நிறுவனம் டிஜிட் ஆகும். கனடா நாட்டு பில்லியனர் பிரேம் வத்ஸாவின் ∴பேர்∴பேக்ஸ் ∴பைனான்சியல் ஹோல்டிங்க்ஸிலிருந்து $140 மில்லியன் அளவிலான மூன்று சுற்றுகள் நிதி திரட்டலையும் மற்றும் A91 பார்ட்னர்ஸ், ∴பேரிங் கேப்பிட்டல் மற்றும் TVS கேப்பிட்டல் ஆகிய மூன்று குரோத் ஈக்குவிட்டி முதலீட்டாளர்களிடமிருந்து $84 மில்லியன் நதியையும் இந்நிறுவனம் திரட்டியுள்ளது. இந்த முழுமையான முதலீடானது, டிஜிட்ஸின் ஒட்டுமொத்த நிதிதிரட்டலை $224 மில்லியனாக்கியுள்ளதன் வழியாக, இந்திய பொது காப்பீட்டுப் பிரிவின் மிகப்பெரிய நிதிதிரட்டல் சுற்றுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.
பெங்களூரை தலைமையிடமாகக் கொண்ட டிஜிட், கிளியர்ட்ரிப், ஸ்டெர்லிங் ஹாலிடேஸ், SOTC மற்றும் பாலிசி பஜார் போன்ற சில முன்னணி நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது. டிஜிட்டல் இன்ஷூரன்ஸ் சமீபத்தில் சிங்கப்பூரின் ஆசியா இன்சூரன்ஸ் ரிவியூ விருதுகளில் ‘ 2019 ஆம் ஆண்டின் பொது காப்பீட்டு நிறுவனம்’ விருதை வென்றுள்ளது. இது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் Linkedin – ன் டாப் 25 ஸ்டார்ட்டப்ஸ் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது. மேலும் CB இன்சைட்ஸின் சிறந்த 250 வேகமாக வளர்ந்து வரும் ∴பிண்டெக் நிறுவனங்களில் 2018 ஆம் ஆண்டில் உலகளவில் பட்டியலிடப்பட்டுள்ளது.

**மேலதிக தகவல்களுக்கு, தொடர்பு கொள்ளவும் : mediarelations@godigit.com**